| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| முனைவர்.சி..உஷாராணி,M.Sc., B.Ed., Ph.D., | செய்தி ஆசிரியர், |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | அனைத்து செய்தி ஊடகங்கள். |
| சென்னை – **600 006.** | |

**ந.க.எண்.060952 /எப்1/2019** **நாள் : 29.08.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு ஜூன்/ஜூலை **2019** – மறுகூட்டல் / மறுமதிப்பீடு முடிவுகள் வெளியிடுதல் குறித்த செய்திக் குறிப்பு – வெளியிடக் கோருதல்–தொடர்பாக.

------

நடைபெற்ற ஜூன்/ஜூலை **2019,** மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வெழுதிய தேர்வர்களின் மறுகூட்டல்/மறுமதிப்பீடு முடிவு வெளியிடும் நாட்கள் குறித்த ''செய்திக்குறிப்பு'' இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை பொதுமக்களும், மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளேட்டில், வானொலியில்/ தொலைக்காட்சியில் செய்தியாக வெளியிடுமாறு / ஒலி/ஒளிபரப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

'இது விளம்பரம் அல்ல' என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
**இயக்குநர்**

<u>**இணைப்பு:**</u> செய்திக் குறிப்பு

<u>**நகல்:**</u>

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து முதன்மை/மாவட்டக் கல்விஅலுவலர்கள்.

**அரசுத் தேர்வுகள்இயக்ககம், சென்னை– 600 006**

**மேல்நிலை முதலாமாண்டு துணைத்தேர்வு, ஜுன்/ஜுலை 2019**

**மறுமதிப்பீடு/மறுகூட்டல் முடிவுகள் வெளியிடுதல்**

**குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெற்ற ஜுன்/ஜுலை 2019, மேல்நிலை முதலாமாண்டு துணைத்தேர்வு எழுதி, மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் **scan.tndge.in** என்ற இணையதளத்தில் **30.08.2019** அன்று பிற்பகல் 2.00 மணிக்கு வெளியிடப்படவுள்ளது. அப்பட்டியலில் இல்லாத பதிவெண்களுக்கான விடைத்தாட்களில் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்குப் பின் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் வருகிற **30.08.2019** அன்று பிற்பகல் 2.00 மணி முதல் www.dge.tn.nic.in என்ற இணையதளத்திற்குச் சென்று, “**HSE First year June/July 2019 – Statement of Marks (Including RV&RT)– Server 1** - ஐ Click செய்து, தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண்கள் அடங்கிய **மதிப்பெண் பட்டியலை (Statement of Marks)** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–

**இயக்குநர்**

**தேதி: 29.08.2019**

**இடம்: சென்னை– 600 006.**